10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

52. மேல்மருவத்தூர், ஆதிபராசக்தி மெட்ரிகுலேஷன் பள்ளிக்குச் சொந்தமான டி.ஏ.எச். 4356 எண் கொண்ட இயக்கூர்திக்குச் சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 4–4–1990-ஆம் நாளிட்ட 741 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

53. அரக்கோணம், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்குச் சொந்தமான டி.எஸ்.ஏ. 7872 எண் கொண்ட சரக்கு வண்டிக்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ.1) துறையின் 31–3–1990 ஆம் நாளிட்ட 704-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

54. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 21–5–1990-ஆம் நாளிட்ட 593-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

55. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள், மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 5–10–1989-ஆம் நாளிட்ட 1107-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

56. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 12–6–1990-ஆம் நாளிட்ட 688-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்டு நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1990 ஆகஸ்டு 22]

57. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1985-86ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1971-ஆம் ஆண்டு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

4. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1982-83 மற்றும் 1983-84ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (தமிழ்).

5. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும். (எண்கள் 1 முதல் 50 வரை)(முதலாவது பட்டியல்).

6. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும். (எண்கள் 1 முதல் 50 வரை) (இரண்டாவது பட்டியல்).

7. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும். (எண்கள் 1 முதல் 50 வரை) (மூன்றாவது பட்டியல்).

8. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை, 1990-91.

9. 1990-91-ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

10. 1990-91-ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள் மீதான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

11. 1990-91-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).